2007 ஜனவரி 22]

செல்லக்கூடிய பாலம் கட்டப்படும் என நம்முடைய அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே தெரிவித்திருந்தார்கள். அதனுடைய பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும் எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாகக் கேள்வி எழுப்பினால், தக்க பதில் அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

கால்நடை மருத்துவமனை

***7163—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, குடியிருப்பு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குடியிருப்பு கிராமத்தில் புதியதாகக் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதி, குடியிருப்பு கிராமத்தைச் சுற்றிலும் 50—க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. கடலூர் மாவட்டத்தில் மிகப் பின்தங்கிய தொகுதி பண்ருட்டி பணருட்டியில் பெரும்பாலும்

[2007 ஜனவரி 22

விவசாயம் சார்ந்த மக்கள் கால்நடைகளை நம்பி, தங்களுடைய வாழ்க்கையை வாழ்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், என்னுடைய சொந்தக் கிராமம், குடியிருப்பு, இன்னும் பல்வேறு பகுதிகளில் மருத்துவமனைகளும், மருந்தகங்களும் இயங்கி வந்தன. அவற்றில் குறிப்பாக, குடியிருப்புக்கு அருகில் இருந்து வந்த மருந்தகமும், மருத்துவமனையும் மூடப்பட்டிருக்கின்றன. என்னுடைய கிராமத்திலும் மூடப்பட்டிருக்கிறது. அதனால் தொடர்ந்து, அங்கு கால்நடைகளுக்கு ஏதாவது பாதிப்பு என்று சொன்னால், பக்கத்திலே இருக்கிற விழுப்புரம் அல்லது பண்ருட்டி போன்ற 20 கிலோ மீட்டர், 30 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கால்நடைகளை வண்டி, வாகனங்களில் ஏற்றி வந்து, சிகிச்சை அளிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருப்பதால், அப்பகுதியினுடைய கால்நடைகளின் உயிர்களைப் பாதுகாப்பதனுடைய அவசியம் குறித்தும், விவசாயிகளுடைய நலனைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்தும், தேவை ஏற்படுகின்ற இடங்களில் கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகளைத் தொடங்குவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா? நடப்பு ஆண்டில் குடியிருப்பில் மருத்துவமனை தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஒன்றியத்தில் 3 கால்நடை மருந்தகங்களும், 8 கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், குடியிருப்பு கிராமத்திலேயே ஒரு கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் கால்நடை ஆய்வாளர்கள் ஒவ்வொரு ஞாயிறுதோறும் அந்தப் பகுதிக்குச் சென்று சிகிச்சை அளித்து வருகிறார்கள். ஒரு பகுதியிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10,000–க்கு மேல் இருந்தால்தான் அந்தப் பகுதிக்குக் கால்நடை மருந்தகம் இந்தத் துறையினால் அமைத்துத் தரப்படுகிறது. குடியிருப்பு கிராமத்திலுள்ள கால்நடைகளுடைய எண்ணிக்கை, பசு, எருமை, வெள்ளாடு, செம்மறி ஆடு உட்பட, கிட்டத்தட்ட 984 மட்டுமே உள்ளது. ஆகவே, குடியிருப்பு கிராமத்தில் மருத்துவமனை ஏற்படுத்தத் தற்பொழுது வாய்ப்பு இல்லை. கூடிய விரைவில், ஏழு நாட்களும் கால்நடை ஆய்வாளர்கள் பணிபுரியும் அளவிற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துத் தரும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

2007 ஜனவரி 22]

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள், வாரம் ஒரு முறை வருவதாக அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்றார்கள். அவர்கள் வருவதற்கான உத்தரவு இடப்படுகிறது. ஆனால், சரியாகக் கிராமப்புறங்களுக்கு வந்து, அந்தப் பணியை அவர்கள் மேற்கொள்வது இல்லை. உதாரணத்திற்கு, கடந்த முறை சட்டமன்றத்தில் நான் பேசியபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். என்னுடைய சொந்தக் கிராமத்தில் மருத்துவமனை, மருந்தகம் இரண்டும் இயங்கி வந்தன...

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. தி. வேல்முருகன்: இரண்டையும் இப்போது மூடிவிட்டார்கள். அமைச்சர் அவர்களுக்கு நான் வேண்டுகோள் வைத்த பிறகு, வாரம் ஒரு மருத்துவர் வந்தார். அவரும் இப்போது நின்றுவிட்டார். ஆக, துறையின் அமைச்சர்கள் அவையில் அளிக்கின்ற பதிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில், துறையினுடைய அதிகாரிகள் உடனடியாக அமைச்சர் அவர்களுடைய அந்த உறுதிமொழியினை நிறைவேற்றுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பகுதி நேர மருத்துவமனைகளைத் தொடர்ந்து முழு நேர மருத்துவமனைகளாக உயர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, தொடர்ந்து ஆய்வாளர்கள் மற்றும் மருத்துவர்கள் அவர்களுடைய பகுதிக்கு வந்து சிகிச்சை அளிக்கும் வகையில் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

திரு. என்.ஆர். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை ஒன்றியம், தம்பிக்கோட்டை, மேலக்காடு கிராமத்திலே கால்நடை மருத்துவமனையிலே மருத்துவர் இல்லையென்ற காரணத்தினாலே, அங்கு விரைவில் மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்களா என்று ஏற்கெனவே ஒரு கேள்வியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டிருந்தேன். புதிய மருத்துவர்கள் நியமிக்க

இருக்கின்றோம், அப்படி நியமித்தவுடன், உடனடியாக அந்த இடம் பூர்த்தி செய்யப்படும் என்று சொன்னார்கள். தற்போது அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா? புதிய மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? தம்பிக்கோட்டை, மேலக்காடு கிராமத்திற்கு புதிய மருத்துவர் நியமிக்கப்படுவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 250 கால்நடை மருத்துவர்களைப் பணியமர்த்துவதற்காக, அரசுத் தேர்வாணையம் மூலம் தேர்வு எழுதியிருந்தார்கள். அது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்த காரணத்தால், இதுவரைக்கும் அவர்கள் நியமனம் செய்யப்படவில்லை. தற்சமயம், அதாவது, இரண்டு, மூன்று வாரங்களுக்கு முன்பு அந்த வழக்கு முடிவு பெற்றுள்ளது. விரைவிலே அரசுத் தேர்வாணையம் 250 கால்நடை மருத்துவர்களை இந்தத் துறைக்குத் தேர்ந்தெடுத்து, அனுப்பவுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் பின்பு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதிக்கு அவர்கள் பணியமர்த்தப்படுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

மீன் விற்பனை நிலையம்

***3120—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பரம்பிக்குளம் அணைக்கு அருகில் மீன் விற்பனை நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,